**<u>செய்தி வெளியீடு எண். 517</u>** **<u>நாள். 02.07..2008</u>**

தமிழக அரசின் சலுகை விலையில் சிமெண்ட் விற்பனை தொடர்பான

செய்தி குறிப்பு.

தமிழக அரசு சிமெண்ட் விற்பனையில், பொது மக்கள் மேலும் பயன் பெறும் வகையில் சில விதிமுறைகளை தளர்த்தி கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

1. பராமரிப்பு செய்வதற்காக சலுகை விலையில் எந்தவித ஆவணமும் இன்றி 25 மூட்டை சிமெண்ட் இதுவரை அனுமதிக்கப்பட்டது. தற்போது இதனளவு 50 மூட்டைகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

இனி பொது மக்கள் 100 மூட்டை சிமெண்ட் வரை தேவையிருப்பின் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் அதற்கான உரிய விண்ணப்பம் அளித்து குடும்ப அட்டையின் பேரில் சலுகை விலையில் சிமெண்ட் வாங்கி கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இதற்காக குடியிருப்பிற்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம் தேவையில்லை. அரசின் இச்சலுகையினை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

க.பணீந்திர ரெட்டி,
நிர்வாக இயக்குநர்.

**வெளியீடு இயக்குநர்,செய்திமக்கள் தாடர்புத் துறை, சென்னை–9**